[திரு. வே. கிருஷ்ணமூர்த்தி] [2004 பிப்ரவரி 6

ஊத்தங்கரை வட்டம், கொட்டுக்காரம்பட்டியில்—எனது சொந்த ஊரான அந்த ஊரில்—உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென்று, 5,000 ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டாவது கல்வி அமைச்சர் அவர்கள், அதற்கு ஆவன செய்து, பள்ளி தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 13 (2)-ஐப் பயன்படுத்துதல் மற்றும் விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம், பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 13(2)-ன்கீழ் ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தும், சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தியும், 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2004) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் ஏற்கப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS